**Deposition of witness**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| O.S.No. | : | 121/2021 |
| Deposition of Witness for | : | PW1 |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | திரு.வீரசேகர் |
| Father's name | : | திரு.வெள்ளாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 20th Day of January 2026.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. எனது பெயரில் உள்ள பட்டா பாஸ்புத்தகம் நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பெயரில் உள்ள பட்டா அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1414 பசலிக்கான

அடங்கல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.03.2008 தேதிய பொது அதிகார ஆவணம் ஆவண எண்.177/BK4/2008 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.04.2008 தேதிய 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் ஆவண எண்.1797/2008 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.11.2020 தேதிய 3ம் பிரதிவாதி 4, 5 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் ஆவண எண்.6480/2020 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பாஸ்போர்ட் 2 எண்ணங்கள் முறையே **வா.சா.ஆ.7 வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து சம்மந்தமான 01.01.1975 முதல் 09.07.2021 வரையான வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பெயரில் 17.07.2012ம் தேதி செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீது அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.